NAMNAADU
ஊர் 2
வீடு 1
தை 1991

B&H SUPERMARKET
198, ARCHWAY RD. N6
01-348 3356
.75P

# நம்நாடு


பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே.



நாளைய விடிவுக்காக இன்று
வானத்துக்குள் மறைந்து கொண்ட
விடிவெள்ளிகளே!
எங்கள் விடுதலையின் வெற்றி.......
உங்கள் பாதங்களுக்குச் சமர்ப்பணம்

## தமிழீழத்தில் யுத்த நிறுத்தம்!! தமிழீழ விடுதலைப் புலிகளின் சுயேச்சையான அறிவிப்பு!!!

உள்ளே......



# பள்ளி வாசலில் கொள்ளி வைத்தனர்



*ஹெலியின் வரவு நோக்கிப் ............ புலிகள்!*

சிங்களப் பௌத்தப் பெரும்பான்மை அரசாங்கத்தின் இராணுவம், உலக நாடுகளின் நவீன ஆயுதங்களுக்காக மண்டியிட்டுக் கிடந்து, அவற்றைப் பெருமளவில் பெற்றுத், தனது அழிவுச் சக்தியை விரிவுபடுத்தி வந்தது. சிங்கள இராணுவ அரசு கோடிக் கணக்கில் நிதியை வாரியிறைத்து, ஆயிரமாயிரமாக, மிகவும் நுட்பம் வாய்ந்த அழிவு ஆயுதங்களை வருவித்தும், விசேட பயிற்சிக் களங்களை நடாத்தியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதும் நிராயுத பாணிகளான தமிழ்ப் பொதுமக்கள் மீதும் தனது ஒருங்கிணைந்த முப்படைத் தாக்குதல்களை மும்முரமாக நடாத்தி வந்துள்ளது. இத்தனைக்கு மத்தியிலும் தமிழீழ மக்களின் விடுதலை வேட்கைக்குத் தீனிபோடமுடியாத பட்சத்தில் சிங்கள இனவெறி, தனது இறுதி அஸ்திரத்தை உபயோகிக்க முடிவு செய்து, அதிற் பாதி வெற்றியும் கண்டுள்ளது! தமிழ்-முஸ்லிம் மக்களை, ஏனைய தமிழ் மக்களுக்கெதிராகத் தூண்டிவிட்டு அவரது பலவீனங்களைத் தனது பலமாக்கி, தமிழ் பேசும் மக்களிடையே, ஒரு பலத்த அழிவுப் பிரளயத்தை ஏற்படுத்தும் பாரிய முயற்சியில் சிறீலங்காவின் ஏகாதிபத்திய அரசு இறங்கியுள்ளது. திருக்கோணமலையில் தமிழ்-முஸ்லிம் மக்களின் நடவடிக்கைகள் வர்ணனைக்கும் அப்பாற்பாற்பட்டவையாக இருக்கின்றன. பிஞ்சுக் குழந்தைகளை காலில் பிடித்துத் தலைகளைச் சுவரில் மோதிச் சிதறடித்துக் கொன்ற படுபாதக நிகழ்ச்சிகள் நெஞ்சைப் பிளக்கின்றன! கத்தியால் வெட்டிக் கோடரியால் பிளந்து, மனித சடலங்களைச் சீவியெறியும் மனிதாபிமானமற்ற வேலைகளில் எமது முஸ்லிம் சகோதரர்கள் ஈடுபடுவார்களென நாம் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

தொழுகை நேரத்தில் பள்ளிவாசலில் **கூடியிருந்த அப்பாவித் தமிழ்-முஸ்லிம் மக்களைக்கொன்றுகுவித்த கொடியவர்களுக்கும் தமிழீழ மக்களின் நியாயமான விடுதலைப் போராளிகளுக்கும் எதுவித தொடர்புமிருக்காதென்பதை எமது முஸ்லிம் சகோதரர்கள், இன்றில்லாவிடினும், என்றாவது ஒரு நாள் புரிந்து கொண்டேயாவார்கள்!** வரலாறு ஒரு நாள், தனது உண்மை வடிவத்தைக் காட்டியே தீரும்! முஸ்லிம் மக்களையும், அவர்களது சமய உணர்வுகளையும் மதிக்காத தமிழன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை! முஸ்லிம் சகோதரர்களை எதிர்ப்பதாலும், அவர்களைத் துன்புறுத்துவதாலும், எமது விடுதலைப் போராட்டத்திற்கு எதுவித பயனும் இருக்கப்போவதில்லை; மாறாக, அனைத்துலக அரசியலரங்கிலும், மனித உரிமைகளை வலியுறுத்தும் இயக்கங்கள் மத்தியிலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மகத்தான இலட்சியத்தினை மாசுபடுத்துவதாகவே இது அமையுமென்பதை சுய உணர்வுள்ள எந்தவொரு சாதாரண பிரசையும் அறிந்து கொள்வான்! அராபிய நாடுகளில், எமக்கு ஆதரவு குறைவதை, நாம் ஒருபோதும் விரும்பமாட்டோம். சிங்கள இனவெறியை முறியடிப்பதற்கு முழுப்பலத்தோடு போராடிக் கொண்டிருக்க வேண்டிய ஒரு நிலையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில், எந்தவித பயனுமளிக்காத ஒரு போராட்டத்திற்குள் இறங்குவதற்கு, தமிழீழ விடுதலை விரும்பும் எந்தவொரு தமிழ்மகனும் முன்வரமாட்டான்

இலங்கை அரசியலில், சிங்களப் பெரும்பான்மையின் அடக்கு முறையில், தமிழ்-முஸ்லிம் மக்களுக்கும் ஏனைய தமிழ் மக்களுக்கும் இடையில் இருந்த நல்லுறவு ஒரு பெரிய தடைக்கல்லாகவே இருந்து வந்தது! தமிழ் முஸ்லிம் மக்களின் தமிழ்ப் பற்றும், அவர்களது தமிழிலக்கிய உறவும், ஈடுபாடும், அவர்களைத் தமிழுலகில், ஏனைய தமிழர்களோடு இணைத்துவைத்திருந்ததை அனைத்துலக தமிழர்களும் அறிவர்! பத்திரிகையுலகில் சிறுகதை, கவிதை, நாவல், நாடக இலக்கியங்களிலும், வானொலிப் படைப்புக்களிலும், எமது முஸ்லிம் சகோதரர்கள், முதுகெலும்பாக

நின்று பிடித்தவர்கள் என்பதைத், தமிழ் பேசும் நல்லுலகம் அறியும்! இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய உணர்வுகள் மட்டுமென்றிப், புத்த சமய உணர்வுகளும் மதிக்கப்பட்டு வந்த ஒரு வரலாறு நமக்குண்டு! சிங்கள பௌத்த இனவெறி, முழு நிலத்தையும் தனக்குச் சொந்தமாக்கி, ஏனைய பிரசைகளின் பிறப்புரிமைகளையும், அவர்களது அபிலாசைகளையும், நாசமாக்கும் நாசகாரியத்திற் தன்னை ஈடுபடுத்திய அன்று தான், ஒரு சனநாயகப் பாராளுமன்ற அமைப்பில், நம்பிக்கை இழக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்டது! ஆயுதமேந்தி அழிவுத் தாண்டவமாடிய, இரத்தக்கறைபடிந்த பாராளுமன்ற அரசியல் ஆண்டாண்டு காலமாகப் பல இரத்தக் களரிகளையும், தீப்பிழம்புகளையும் ஏற்படுத்தி வந்தது! தனிச்சிங்களத் திணிப்பையும், பௌத்த மத வெறியையும், இராணுவச் சீர்கேடுகளையும், ஆயுதமேந்திய இரகசியக் குடியேற்றங்களையும், தனிமனித உரிமைகள் பறிப்பையும், இனப்படுகொலையையும், எதிர்த்துப் பாராளுமன்றத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்ட ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கிழித்தெறியப்பட்டன; எரிக்கப்பட்டன! அரசியல் ரீதியாகச் செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களும், ஆத்மீகரீதியாக எழுப்பப்பட்ட கோஷங்களும், எள்ளிநகையாடல்களுக்கும், ஏளனப் பேச்சுக்களுக்கும் விருந்தாகின!

**தமிழ் பேசும் மக்களுக்குப் பாதுகாப்பளிக்க ஓர் இனமானங் காக்கும் தேசியப்படை இருந்தாக வேண்டுமென்ற எண்ணம், இலங்கைக்குள் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனது நெஞ்சிலும் உருவாகியிருந்தது!**

நினைத்தபடியெல்லாம் எம்மைத் தாக்கி, எமது நெஞ்சைத் துளைக்கும் வலிமையை, ஒரு சிங்களக் காடையனும் பெற்றிருந்தான்! எமது தங்கையரை, எம்நாட்டு மங்கையரைத் தீண்டும் துணிவு, ஒரு சிங்களப் பேடிக்கும் இருந்தது! கள்ளுக்கும் கஞ்சாவிற்கும் மண்டியிடும்... பொலிஸ்காரன் கூடத் தமிழனின் முதுகு கண்டால் தாராளமாகக்குத்தித் தள்ளினான். எத்தனை சவுக்கடிகளைத் தாங்கியிருக்கிறோம்! எத்தனை வசைகளையும், வழுக்களையும், விழுங்கியிருக்கிறோம்! முதுகு கூனியவர்களாக, முட்டாள்களாக, ஊனர்களாக, ஊமையர்களாக, விலங்கு பூட்டிய விலங்குகளாக, உலவி வந்திருக்கிறோம்! இதன் எல்லையிற்தான், ஆயுதமெடுத்தார்கள் நம்மிளைஞர்கள்! போர் தொடுத்தார்கள் நமது செல்வங்கள்! தாம் வாழ அல்ல! தங்கத் தாம்பாளத்தில், வெள்ளித் தட்டுக்களில் விருந்துண்டு, பட்டிலும் , பவளத்திலும் பள்ளி கொள்ள அல்ல! காட்டிலும், மேட்டிலும், காலணிகூட இன்றி, வேட்டுவ வாழ்க்கை ஏற்று நடந்தார்கள் இவர்கள்!


காகத்தையும், குருவியையும், பாம்பையும், பல்லியையும், குரங்கையும், நரியையும் உண்டு பிழைத்தார்கள் இவர்கள்! நெருப்பையுண்டு திருப்திப்பட்டார்கள் இவர்கள்! சிங்கள வெறியர்கள், உலக நாடுகளுக்குச் சனநாயகம் போதித்து வருகிறார்கள்! போதி மரத்துப் புத்தரின் போதனைகளைக் கூறி வருகிறார்கள்! இவர்கள்பேச்சை நம்புவதாக நடித்து, இவர்களுக்கு ஆயுதங் கொடுத்து வந்தார்கள், உலகையே விழுங்கி ஏப்பம் விடக்கூடிய வல்லரசாளர்கள்!

**முஸ்லிம் - தமிழ் சகோதரர்களே! சிங்கள வெறியர்கள் பள்ளிவாசலில், எமது உறவுக்குக் கொள்ளி வைத்திருக்கிறார்கள்! உங்களை ஆயுதமாகப்பயன்படுத்தி, நீங்கள் போற்றிடும் தமிழ்மொழிக்குத்தீயிடப் போகிறார்கள், இந்தக் கொடியவர்கள்! ஊர்காவற்படையென்ற போர்வையில் உங்கள் கைகளில் கத்தி, வாள், ஈட்டி, மண் வெட்டி,கோடரிகளைக் கொடுத்து, இரத்தக் காட்டேரிகளாக, உங்களை ஏவி விட்டிருக்கிறார்கள், இந்தச் சிங்கள மந்திரவாதிகள்! உங்கள் கரங்களில் தீப்பந்தங்களைக் கொடுத்து, அக்கினிப்பிசாசுகளாக மாற்றியிருக்கிறார்கள்; கொப்பேக்கடுவவும், ரஞ்சனும்! இந்தக் கொடிய மயக்கத்திலிருந்து, அரசியல் உறக்கத்திலிருந்து, விழித்துக் கொள்ளுங்கள்! நாம் தமிழர்! எமது மொழி தமிழ்மொழி! எம்மைப் பிரித்து, இவர்கள் தமது இலட்சியத்தை நிறைவேற்றுவதை, நாம் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது! இதை அனுமதிப்போமாயின், எத்தனை யுகங்கள் போயினும், எங்களை வரலாறு மன்னிக்கப் போவதில்லை!**


**Tamils Rehabilitation Organization**

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**

HEAD OFFICE: 83/2, KKS Road, Kokuvil, Jaffna
U.K. OFFICE: 59 Aubrey Road, London, E17 4SL
Tel: 081-509 2380



'அண்ணாவா?' என்றேன்!
'ஆமாமடா! தம்பி!
சும்மா ஒரு முறை...
உனைப் பார்த்துப்
பேசிட வந்தேன் என்றார்!

'கண்ணிலென்ன?
அண்ணா!'
எனக்
கவலையோடு
விசாரித்தேன்!
'புண்ணில்லை'
வேதனையில்
வடிந்த கண்ணீரால்..
ஏற்பட்ட விளைவு ' என்றார்!

'என்னண்ணா ! என்று..
அவரருகே சென்று..
உட்கார்ந்தேன்!
தென்னகத்தின்
தென்றலாய்த்..
தேன் தமிழின் ஊற்றாய்..
விண்ணதிரப் பேசும்
அண்ணாவைக்...
கண்ணெதிரே கண்ட ....
களிப்பு ஒரு புறம்!
செந்நீராற் கழுவிய..
செம்பழம் போற்
காட்சிதந்த ..
பெருவிழிகள் பார்த்த..
வியப்பு மறுபுறம்!

ஏனண்ணா.... அழுதீர்கள்?
எடுத்தவுடன் ......
கேட்டுவிட்டேன்!
ஈழத் தமிழன் இன்னல்
தனைக்கண்டு...
மீளாத்துயரில்
வீழ்ந்தாயோ? என்றேன்!
இல்லை! இல்லை!..என்றார்!
போரென்றால் ...அங்கே..
புண்ணிருக்கும்
தானே!
வேலும்..... வாளும்......
சந்தணமா
பூசுமென்றார்!
விடுதலையின் வீச்சுக்குப்
பலிகொள்ளும்
ஆற்றலுண்டு!
முல்லையும் ... மல்லிகையும்
கூட...
உயிர் குடிக்கும்
ஆயுதமாய்..
வல்லவனின் கரங்களினை
நிரப்புமென்றார்!

செந்நீரும்..... கண்ணீரும்
..........
ஈழத் தமிழ் மக்கள்.
மண்ணைக் கழுவுவது..
கண்டு நான்
கலங்கவில்லை!
என்றார் அண்ணா!

சொல்லா இது!
என்னண்ணா
சொன்னீர்கள்!
கல் நெஞ்சா உங்களுக்கு!

உறங்காத அறிஞனென்றும்.
ஒப்பற்ற
தலைவனென்றும்.
எண்ணிய எம்மினத்தின்..
இன்னல் கண்டும்.
இப்படியேன் சொன்னீர்கள்?

கண்ணாடி தன்னைக்
கழற்றித்
துடைத்தார்;அண்ணா!
சின்னவன் நான்.
அவரின் நெஞ்சத்தைப்..
புண்ணாக்கி விட்டேனோ..
என்றே நினைத்து..
அவர் பதிலுக்.. கேங்கி
யிருந்தேன்!

" நான் படித்த கலிங்கத்தை..
நேரிற் பார்க்கும்.....
வாய்ப்பிழந்த பாவியாய்...
ஆகிவிட்டேன் தம்பி!

தமிழனுக்கும் ஒரு படை!
அவனுக்கும் ஒரு
தலைவன்!
வீரத்தின் விளை நிலமாய்
வீறு நடை போடுகின்ற..
ஈழத்தின் போரில்.
இணைந்து கொள்ள.
வாய்ப்பில்லாப்....
பாவியடா..தம்பி..நான்! "
என்று.
விம்மி விம்மியழுதார்.....
பேரறிஞர்!
" தமிழகத்திலிருந்து......
தமிழ்ப் படைகள் சென்று....
**தமிழர்.தலைவன்..**
**பிரபாவைத்**
தொடர்ந்திருக்கும்!
அவனோடு...... நானும்
அருகில் இருந்திருப்பேன்!

இதுதான் என் கவலைக்குப்
பொருளென்று கூறிப்
பொடியை உறிஞ்சி......
எழுந்தார் அண்ணா!

# செய்திகளும் பின்னணியும்

## 1. தமிழீழத்தில் யுத்த நிறுத்தம்!! தமிழீழ விடுதலைப் புலிகளின் சுயேச்சையான அறிவிப்பு!!!

1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ந் திகதி நள்ளிரவு 12 மணி முதல் , கால வரையற்ற ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தமொன்றினைத்தமிழீழவிடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.! தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து காலவரையற்ற ஒருதலைப் பட்சமான யுத்தநிறுத்தமொன்று அறிவிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்!

விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தம்தொடர்பான அறிக்கையில் பின்வரும் விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.!

1. தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ சூழ் நிலையினையும் உருவாக்கும் நல்லெண்ண நோக்குடனேயே இவ் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. சிறீலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்தத்தினை மீறித் , தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டால், விடுதலைப் புலிகள் தற்பாதுகாப்பிற்கான ஆயுத நடவடிக்கைகளை மேற்கொள்ள உருத்துடையவர்களாவர்!

3. எமது மக்கள் மீதான போரை நடத்துவதா அல்லது சமாதானத்தை நிலைநாட்டுவதா என்பதைத் தீர்மானிக்கும் முழுப்பொறுப்பும் சிறீ லங்கா அரசிடமேயுள்ளது!.

4. சிறீ லங்கா அரசாங்கமும் யுத்த நிறுத்தத்தினை அறிவித்து, இரு தரப்பினரும் யுத்த நிறுத்தத்தினைக் கடைப்பிடிக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவுள்ளனர்!.

5. கிழக்கு மாகாணத்தில், மக்கள், காடுகளிலும், அகதி முகாம்களிலும், சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.! சிறீலங்கா அரசு, யுத்தத்தினைப் போலிக் காரணமாக வைத்து, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளை, நிவாரணம் வழங்குவதற்குப், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் போகவிடாமற் தடை செய்து வருகின்றது.! கிழக்கு மாகாண மக்கள் அனுபவிக்கும் அவல நிலையினை, உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உலக நிவாரண அமைப்புக்களிடமிருந்து உடனடியான நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதும் இவ் யுத்த நிறுத்தத்தினை அறிவிப்பதற்குத் தூண்டுதலாக அமைந்தது.!

மேற்கண்ட விபரங்கள்கொண்ட அறிவிப்பின் மூலம் தமிழ் மக்களுக்கான தீர்வு நோக்கிய தமது நிலைப்பாட்டினைத் தெளிவு படுத்தியுள்ளனர் தமிழீழ விடுதலைப் புலிகள்.

**பேச்சு வார்த்தைகளும் உடன்படிக்கை களும், எமது விடுதலைப் போராட்டத்தின் பக்க வடிவங்களென்பதை எமது மக்கள் கருத்திற் கொள்ளுதல் அவசியமாகும்!**

தமிழ் மக்களின் பிரச்சனைக்குரிய தீர்வுக்கு முன்னதாக, அவர்கள் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டுமென்று ரஞ்சன் விஜெரத்தினா அறிக்கைகள் விடுத்து வருவதை நாம் அறிவோம்.தமிழரின் பாரம்பரியத் தாய் நிலத்தையும் தமிழ் மக்களையும் பாதுகாப்பதற்கென ஒரு தனியான தமிழிராணுவம் அங்கீக்கப்படாத வகையில் தமிழருக்கு எச்சந்தர்ப்ப த்திலும், எது வித தீர்வும் ஏற்பட முடியாதென்பதை , எமது கடந்த காலம் எமக்குக்கற்பித்து ள்ளது.!

தமிழீழ விடுதலைப் புலிகள், இரண்டு முக்கியமான அடிப்படைக் கொள்கைகளை முன்வைத்தே இது வரை காலமும் எமது விடுதலைப் போராட்டத்தினை வழிநடத்தி வந்துள்ளனர்.

1. சிறீலங்கா அரசு, வடக்குக் - கிழக்கைத் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாய் நிலங்களாக அங்கீகரிக்க வேண்டும்!

2. தமிழ் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகத் தனித் தமிழ் இராணுவம் உருவாக்கப்படுதல் வேண்டும்.

**சிங்களக் குடியேற்றங்களையும் , சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்களையும் தடுத்து நிறுத்தாத எந்தத் தீர்வும் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமையப் போவதில்லையென்பதில் விடுதலைப் புலிகள் மிகவும் உறுதியாக இருந்துள்ளனர்.**

தமிழரின் தாய் நிலங்களிற்குள் சிங்களக் குடியேற்றங்களையும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்களையும் அனுமதிக்கும் நிலை தமிழ் மக்களுக்கு இருக்கும் வரையில் தமிழினம் இலங்கைத் தீவிலிருந்து பூண்டோடு அழிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உடன் இருக்குமென்பதை எமது மக்கள் புறக்கணித்து விடக்கூடாது.

சிறீலங்காவின் சிங்கள அரசு, வடக்குக்-கிழக்கினைத் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாய்நிலங்களாக அங்கீகரித்து, அந்த அங்கீகாரத்திற்கு மதிப்புத் தரும் வரை

யில், அது தமிழ்ப் பகுதிகளில் ஆயுதமேந்திய சிங்களக்காடையர்களைக் குடியேற்றும் தனது ஆவேசமான திட்டத்தை நிறுத்தப் போவதில்லை! சிங்கள இராணுவம் தமிழ்ப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள வரையில், எமது மக்கள் பாதுகாப்புடன் வாழப்போவதில்லை!

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் புரிந்துணர்விற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தருவது நமது கடமையாகும்! இதே வேளையில், இரு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு சிறிய தீவிற்குள், ஓர் இரட்டை - இராணுவ அமைப்பு ,எவ்வாறு சாத்தியப்படுமென்ற சிந்தனைக்கும் இடமிருக்கலாம். இவ்வாறு எண்ணுவோர், ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பின் (E.E.C.யின்) கீழ் ஐரோப்பியத் தேசிய இனங்களின்தேசிய நலன்கள் பாதுகாக்கப்பட்டுவருவதுடன் அத்தேசிய இனங்களுக்கான உரிமைகளும், அபிலாசைகளும் வலியுறுத்தப்பட்டு வருவதையும்அவதானிக்கத்தவறக் கூடாது! ஒவ்வோரினமும் தனக்கென ஓரிராணுவத்தைக் கட்டியெழுப்பாது போயின், அந்த இனத்திற்கான தற்பாதுகாப்பிற்கு, எதுவித காப்புறுதியும் இல்லையென்பதைத், தற்கால அரசியல் நிகழ்வுகள் வலியுறுத்தி வருகின்றன!

**ஏனைய இனங்களை ஆக்கிரமித்து அடக்குவதற்குத் தமிழ் மக்கள் ஓரிராணுவத்தைக் கட்டியெழுப்பப் போவதில்லை! பல்லாண்டு காலமாகத், தாம், பேணிப் பாதுகாத்து வந்தது, நில, மொழி, கலாச்சாரப், பண்பாட்டுத்தேசியஉடைமைகளை ஏனைய இனங்களின் தன்னிச்சையான அழிவுப்பிடியிலிருந்துவிடுவித்துக்கொள்ளவே தமக்கென ஓரிராணுவத்தை நிறுவிட நிற்கிறார்களென்பதை, உலகநாடுகளிற்குத் தெரிவிக்கும் பொறுப்பு நம்மெல்லோருக்கும் உண்டென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.**

# செய்தி 2

## தமிழ் - முஸ்லிம்களுக்கும், ஏனைய தமிழருக்கும் இடையில் உடன்பாடு!

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரவ்வும், சிங்கள இராணுவத்தின் தோழமை இயக்கமொன்றும்,முஸ்லிம் - தமிழ் மக்களையும், ஏனைய தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும், இவர்களுக்கிடையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் அரசியல் எதிர் காலம் பற்றிய உடன்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும், சிறீலங்காவின் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களிற் செய்திகளைக் காவிச் செல்கின்றன! அராபிய நாடுகளில் ஆயுதபலத்தைச் சேகரிக்கும் நோக்கிலும் வடக்குக் கிழக்கு மாகாண இணைப்புக்குக் கொள்ளி வைக்கும் நோக்கிலும் பள்ளிவாசலில் தனது கைக்கூலிகளின் உதவியுடன் சிங்கள இராணுவம், பயங்கரக் கொலைச் சம்பவம் ஒன்றை நிகழ்த்தி வைத்தது!

விடுதலைப் புலிகளின் மீது குறிப்பாகவும், தமிழீழமக்கள் மீது பொதுவாகவும் இராணுவ ரீதியான ஒரு யுக்தியைச் சிங்கள இனவெறி நடத்திக் காட்டியுள்ளது!

லிபியா, ஈராக், ஈரான், சவுதிஅரேபியா போன்ற நாடுகளில், தனது ஆயுதக் கேள்விப் பத்திரங்களை நீட்டுவதற்கு முன்னர் முஸ்லிம் மக்களுக்காக ஒரு ஒப்பாரி நிகழ்ச்சியை நடத்துவதே சிங்கள இராணுவத்தாரின் நோக்கமாகும்!

தமிழ் முஸ்லிம் மக்களைத் தனது பக்கம் இழுக்க முடியாத போதிலும் தமிழ் முஸ்லிம் காங்கரசின் தலைவரைத் தனது கைப்பொம்மையாக்கித் தனது திட்டத்தை நிறைவேற்றக் கொழும்பரசு தீர்மானித்துள்ளது!

# செய்தி 3

"நான் ஒரு போரை நடத்துகிறேன்! பொதுமக்களின் அழிவு சாதாரணமானதே"- ரஞ்சன். இந்தப் பாவியின் பல்லவியைக் கேட்டும், இந்தக் கொடிய அரசு தமிழர்க்கோர் அரசியற் தீர்வு தருமென எதிர்பார்க்கும் தமிழ்ச் சீவன்களுக்காக வருந்துகிறோம்! இச்சந்தர்ப்பத்தை நாம் நழுவ விட்டால் எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை! ஒருமித்த நிலையில் எமது ஆயுத பலத்தை விரிவு படுத்தி எமது தமிழ்த் தேசியப் படையை வலுப்படுத்தி எமது சுயநிர்ணய உரிமைகளை மீட்டெடுக்கத் தமிழர்களாகிய நாம் தவறக்கூடாது. தமிழ் - முஸ்லிம் மக்களில் ஒரு சிலரும், எம்முடன் பிறந்து, மாற்றானின் பாசறைக்குட் பதுங்கிக் கொண்ட ஓரிருவரும், போடும் கூச்சல்களைப் புறக்கணித்து,எமது விடுதலைப் போராட்டத்தினை முன்னடையச் செய்தல் அவசியமாகும். நவீன ஆயுதங்களை நோக்கி நமது ஆதரவு பலப்படுத்தப்பட வேண்டும்.

அரசுகூறுவதையோ, நாம் சகித்துக் கொள்ள முடியும்! ஆனால், வீரகாவியங்களைத் தீட்டி, தமிழன் வீரவரலாறுகளைப் போற்றிய கலைஞரின் தலைமையிலான அரசு, எமது மக்களை, நிராயுதபாணிகளாகப் பார்க்க நினைக்கக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும்! எத்தீர்வு ஏற்பட்டாலும், புலிகளின் கையில் ஆயுதம் இருக்கும் போதுதான் ஏற்பட வேண்டும்! தமிழீழ மக்களிற்குத் தற்பாதுகாப்பற்ற நிலையில், அவர்கள் நிராயுத பாணிகளாக வாழும் நிலையில்........... தீர்வு அளிக்கும் தகைமை சிங்கள அரசுக்கு உண்டு என்பதைத் தமிழக அரசு எதிர் பார்க்குமாயின் அது தமிழீழ மக்களின் நிலைமையைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்றே எண்ணத்தூண்டும்!

உலகம் பார்த்திருக்க ஓரினக்கொலையை நடத்திய படுபாதக அரசு சிங்கள அரசு! விடுதலைப்புலிகள் நிராயுதபாணிகளானால் ஈழத்தமிழர்களுக்கு ஒரேஒரு தீர்வு தான் அமைய முடியும். அது மரண தண்டனையாகவேயிருக்கும். இந்த உலகில் எம்மைக்காப்பாற்ற ஒரேஒரு படைதான் உண்டு. அதுதான் தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழனுக்கும் சூடு சுரணை உண்டு; தன்மானமுண்டு; சீறியெழும் சீற்றமுண்டு என்ற வரலாற்று உண்மையை நூலகங்களிலும் மேடைகளிலும் தான் அறிந்து வந்தோம். இன்று எங்கள் கண்களின் முன், இந்தப் பாரே வியக்கும் நிலையில் இவற்றை நிறுவிக்காட்டிய வீரத் தமிழன், ஈழத்திலே வாழ்கிறான் என்ற வீரப் பரணியைக் கலைஞர் பாடவேண்டும! அதை நாம் கேட்க வேண்டும். இதுவே எங்கள் பேரவாவாகும். பண்டாரவன்னியன் பிறந்த பூமியில், நின்றாடும் தமிழ் வீரன் பண்பாட...... வாருங்கள் கலைஞரே!.



*கொக்குவில் தொலைக்காட்சிக் கோபுரம்; சுக்கு நூறானது!*

# யாழ் கோட்டையிலே புலிக்கொடி

பறக்குதடா யாழ் கோட்டையிலே
எங்கள் புலிக்கொடி!
பகைவனிடம் போய்ச்சொல்லுங்கள்.......
இதுதான் முதல் அடி!
கோட்டை கோட்டையாய்
இனி விழும்!-புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும்!
(பறக்குதடா)

கொடிய பகைவர்கள் நெடுநாள் இருந்தாண்ட
கோட்டையை நாங்கள் பிடித்தோம்!
இடியாய் வெடித்தோம் கோட்டையில் இருந்த
எதிரிகள் கதையை முடித்தோம்...


கோட்டை கோட்டையாய்
இனி விழும்!-புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும்!
(பறக்குதடா)

குண்டுகள் வானில் அள்ளிக் கொட்டினாய்!
கொடியவனே என்ன கண்டாய்?
சண்டையிலே பார்த்தோம்..... கோட்டையிலே உன்னுடல்
சரிந்தது துண்டு துண்டாய்!
கோட்டை கோட்டையாய்
இனி விழும்!-புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும்!
(பறக்குதடா)

எந்த மாற்றான் எம் சொந்த மண்ணிலே
வந்து குந்துவான் பார்ப்போம்!
வெந்து வெந்து நாம் இனியும் சாவோமா?
விரைவிலே கணக்குத் தீர்ப்போம்

கோட்டை கோட்டையாய்
இனி விழும்!-புலிக்
கொடி கொடியாய் நாட்டில்
இனி எழும்!
(பறக்குதடா)

காசி ஆனந்தன்.



*கோட்டைகள் அந்நியர் சின்னம்! - அவை குப்புற வீழ்வது திண்ணம்!*

கடந்தசில மாதங்களாக உலகின் நாலாதிசை களிலும் பலத்த தலைமைப் பலப் பரீட்சை கள் நிகழ்ந்து வருகின்றன. இந்தியா, பாகிஸ் தான், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் அரசி யற் தலைமைகளிற்கு பெரியசோதனையான கட்டங்கள் வந்து போயுள்ளன. இச்சோத னையான கட்டங்களால் இந்த நாடுகளின் அரசியற் தலைவர்கள் தமது பதவிகளைப் பறிகொடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்திற் குத் தள்ளப்பட்டுள்ளனர். ஓரினத்திற்குத் தலைமை வகித்து அந்த இனத்தை ஒரு பாதையில் நடத்திச் செல்வது எளிதான காரியமல்ல.

அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சனைகளை அணுகும் முறைகளிலும் அவ்வணுகு முறைகளை மக்களுடன் தொடர்புபடுத்தி, அந்த மக்களையும் பிரச்ச னைகளின் தீர்வுக்குத் தயார் படுத்துவதி லுமே ஒரு தலைமையின் வெற்றி தோல்வி அமைய முடியும்.





பிரச்சனைகளெழும் போது............... முடிவெடுக்க வேண்டிய பொறுப்பும் அத்தியா வசியமும் தலைமைக்கு ஏற்படுகின்றது. முடிவெடுக்கும் போது அந்த முடிவு மக்கள் மத்தியில் எந்தளவு பாதிப்பை ஏற்படுத்து மென்பதையும் அப்பாதிப்பினால் தலை மையும் அதுசார்ந்த அமைப்பும் எதுவகை யான ஒரு தாக்கத்தை அனுபவிக்குமென்ப தையும், தலைமை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கும்.

றதோ அவரால் மிகவும் நீண்டகாலம் அரசியலில் நின்று பிடிக்க முடிகின்றது.

இந்தியா, தென்கிழக்காசிய நாடுகளின் சிகரமாகத் திகழ வேண்டிய ஒரு நாடென்ப தில் எதுவித ஐயமுமில்லை எனினும் ........ இந்திய அரசியலின் போக்கும் இந்திய மக்கள் மத்தியில் எழுந்துநிற்கும் பிரச்சனை களும் அவர்களது விழிப்புணர்வும், உலக அரங்கில் ஆசிய மக்களின் நலனுக்கு வீழ்ச்சியளிப்பதாக அமைந்துள்ளமை, எம்மை ஆழமாகத் துன்புறுத்துகின்றது. நல்லதொரு தலைமை உருவாகி இந்திய மக்கள் புரிந்துணர்வும் விழிப்புணர்வு முள்ள ஒரு சக்தியாக மாறினால் எமது எதிர்காலம் ஒளிமயமானதாக அமையுமென் பதில் எதுவித சந்தேகமுமில்லை. ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் நம்முடன் இணைத்துக்கொள்ள வேண்டும். ஆபிரிக்க நாடுகளிலும் தலைமைச்சக்திகள் அகில உலக ரீதியாக **மூன்றாவதுலக நாடுகள்** என்ற இழிவுச் சொல்லைத் தகர்த்தெறியும் வழியில் முன்னேற்றமான கொள்கைகளுடன் வளர வேண்டும்.

ஐரோப்பாவின் மாற்றங்கள் எம்மை நேரடியாகவும் எதிரிடையாகவும் தாக்கு வதை நாம் மறந்துவிடக்கூடாது. ஐரோப்பியத் தலைமைகள் உலகிற் தம்மையொரு ............... அதிபலம் வாய்ந்த நிலைக்குத் தள்ளிச் செல்ல நிற்பதை நாம் அவதானிக்கத் தவறக் கூடாது. அமெரிக்க வல்லரசின் தலைமை தன்னைத் தானே உலகின் பாதுகாவற் சக்தியாக எண்ணி முடிவுகளை எடுத்து வருகின்றது.



எடுக்கும் முடிவுகள் பிரபல்யமான வையாகவும் மக்களின் ஆதரவைப் பெற வல்லவையாகவும் இருக்கலாம். இதற்கு மாறாக வரவேற்பில்லாதவையாகவும் மக்க ளின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வல்லவை யாகவும் இருக்கலாம். எனினும் நாம் வாழு கின்ற இந்த யுகத்தில் தலைமைப் பீடங்கள் அநேகமாகத் தமது சொந்த நலன் கருதிய முடிவுகளையே எடுப்பதைக் கண்டு வருகி ன்றோம். இந்த இடத்திற்றான் ஒரு தலைவ னையோ தலைவியையோ இனங்கண்டு கொள்ள முடிகின்றது.

மக்களின் பலவீனங்களைப் பயன் படுத்தி அவர்களின் ஆதரவினைப் பெறக் கூடிய வகையில் தனது சுயநலத்தினைக் கருவாக்கிய முடிவுகளையும் தீர்மானங் களையும் எடுத்துப் பதவிக்கு வருகின்ற தலைவர்களையே நாம் அநேகமாகச் சரித் திரங்களிற் சந்திக்கின்றோம். அரசியற்சந்தர் ப்பவாதம் தற்காலத்தலைமைகளின் முக்கிய குணாதிசயமாக இருக்கக் காண்கிறோம். பாராளுமன்ற அரசியலும் அதுசார்ந்த தேர்தல் நடவடிக்கைகளும் அரசியற் சந்தர்ப்பவாதத்தின் புகலிடங்களாக மாறி வருகின்றன. யாரால் மக்களின் பலவீனத் தை அதிகமாகப் பயன்படுத்த முடிகின்

தேசிய உணர்வும் சுயநிர்ணய உரிமை யும் பாதுகாக்கப்படுவதையே தற்கால அரசியல் வலியுறுத்தி வருகின்றது. பாரா - ளுமன்ற அமைப்புக்களிற் கூட தேசிய இனவாதமே ........ முன்னணி வகிக்கின்றது. தேசியத்தைப் பாதுகாக்கும் உரிமை ஓர் இனத்தின் அடிப்படை உரிமையாக மனித உரிமைச் சாசனங்களும் சர்வதேச சட்ட மூலங்களும் ஏற்று வருகின்றன. **துரதிஷ்ட வசமாக ஒருசில தேசிய இனங்களின் விடயத்தில் தேசியத்தைப் பாதுகாக்கும் உரிமைகள் ஒரு சில ஏகாதிபத்தியவாதி களால் மறுக்கப்பட்டும் தகர்க்கப்பட்டும்** வருகின்றன.

இக்கட்டுரை
தலைவர்
பிறந்த நாள

# தலைமையும் தலைவரும்...

இந்தச் சந்தர்ப்பங்களில் பல தேசிய இனங்கள் தம்மை இந்த ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுவித்துக்கொள்ளும் ஒரு பாரிய போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இந்த இனங்களைப்பொறுத்தவரை, அவர்களது தலைமை, ஒரு இராணுவ ரீதியான தாக்குதலுக்கும் அடக்கு முறைக்கும் எதிராகத் தன்னை தயார்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.



பாராளுமன்றச் சனநாயக அமைப்பில் இராணுவம் என்ற பெயரில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபடும் போராளிகளை அரச பயங்கரவாதம் சனநாயகமென்ற போர்வையில் மௌனப்படுத்தி விடுகின்றது. இதனாலேயே பல சந்தர்ப்பங்களில் ஆயுதப் போராட்டங்கள் முழுவலுப் பெற்று அரச நிர்வாகங்களையும், அவற்றைப் பயன்படுத்தி அரச பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் தனிமனித ஆதிக்கங்களையும் தகர்த்துவிட முயல்கின்றன.

**தமிழினத்தைப் பொறுத்தவரை எமது வீழ்ச்சிக்குக் காரணம் ஒன்றேயொன்றுதான். எம்மை நாம் ஒரு தலைமைக்குக் கீழே அணிவகுக்கும் தகைமையற்றவர்களாக வளர்ந்து விட்டோம். நெறிப்படுத்தப்படாத ஓர் இனமாக நாம் எல்லாத் திசைகளிலும் அலைகின்றோம். இராணுவரீதியாக அரச பயங்கரவாதத்தின் மூலம் எமது தேசிய வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சிங்கள இன வெறிக்கெதிராக நாம் திரள வேண்டிய அவசியத்தை மறந்திருக்கின்றோம்.**



கடந்த நாற்பதாண்டு காலமாக நாம் சாதித்தவற்றை எண்ணிப்பார்ப்போமானால் இன்றுதான் தமிழன் உலக அரசியலரங்கில் தனக்கென ஒரு திட்டவட்டமான பரப்பளவைப் பிடித்திருக்கின்றான். உலகில் , ஒரு தமிழன், உயிர் போகும் வரை புடைக்கப்பட்டாலும் அவனுக்காக ஆயுதமெடுக்க ஒரு படை இதுவரை இருந்ததில்லை. இன்றுதான் உலகத்தமிழன் சார்பில் ஒரு தேசிய பாதுகாப்புப்படை ........... உருப்பெற்று நின்று போராடுகின்றது. அதற்கென ஒரு தலைமையுண்டு. அந்தத் தலைமையைப் புரிந்து கொண்டு அதற்கு ஒரு வாய்ப்பளித்து உலகில் தமிழ்த்தேசிய இனத்தின் பூர்வீக வரலாற்றைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய பொறுப்பு நம்மெல்லோருக்கும் உண்டு.



ஒரு தலைமையின் கீழ் எமது இனம் திரளாது போயின் எமது விடுதலையை நாம் அடைய முடியாது. இந்தத் தலைமை எது என்பதை .... எமது பகைவன்தான் எமக்குச் சரியாகச் சுட்டிக்காட்டுவான். இந்தத் தலைமையின் பலத்தை எமது பகைவன்தான் அளவிட்டுச் சொல்லுவான். தனது நோக்கிற்கு நேரெதிரான நோக்குள்ள ஒரு சக்தியையே எமது பகைவன் தீர்த்துக்கட்ட முடிவு செய்வான்.

சிங்களப் பௌத்த இனவெறியே ஈழத்தமிழ் மக்களின் பகைவன் என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் மக்களின் தேசிய உரிமைகளைப் பறித்தெடுத்து அவர்களைத் தனது ஏகாதிபத்திய அடக்கு முறைக்குள் உட்படுத்தி அவர்களைக் காலாகால அடிமைகளாக்குவதே

10ம் பக்கம் தொடரும்

டுமரை தமிழீழ விடுதலைப் புலிகளின்
வர் தம்பி பிரபாகரனின் (கார்த்திகை 26)
நாளையொட்டிப் பிரசுரிக்கப்படுகிறது.

# தலைமையும் தலைவரும்

முன்பக்க தொடர்ச்சி

சிங்களப்பௌத்த இனவெறியின் தலையாய நோக்கமாகும். இராணுவரீதியாகத் தனது பலத்தினைத் திணித்துத் தமிழ் மக்களை நிராயுதபாணிகளாக்கி மூச்சு விடுவதற்கும் தம்மிடம் அனுமதி கோரி நிற்கவேண்டிய ஒரு கட்டாய நிர்ப்பந்தத்திற்குள் நமதுமக்களைக் கட்டிப் போடுவதோடு அரசியல் பொருளாதார சமூக விவகாரங்களிலும், மொழி, நில, கலாச்சார நடவடிக்கைகளிலும் தனது சுயநன்மைகளைக் கருதிச் செயற்படுவதே சிங்கள இனவாதத்தின் சிந்தனையாகும்.

காலாகாலமாக சிங்கள மக்கள் மத்தியில் வலுப்பெற்ற தலைமைகளும் தலைவர்களும் தமிழின ஒழிப்பிற் தமது பங்குகளைச் செலுத்தத் தவறியதில்லை. சிங்கள மக்கள் இந்தவிடயத்தில் தமது தலைவர்களை ஆதரிக்கத் தவறியதுமில்லை. ஆனால் நாமோ தமிழினத்தேசியப் பாதுகாப்பில் எமக்குக்கிடைத்த தலைவர்களை நல்ல முறையில் பயன்படுத்தவும் அவர்களுக்கு ஒத்துழைப்புத் தரவும் தவறியிருக்கின்றோம். கேள்வி கேட்பதோடு மட்டும் எமது ஒத்துழைப்பு நின்றுவிடக் கூடாது. கேள்விக்குப் பதிலளிப்பதும் நமது பொறுப்பாகும்.

ஓர் இராணுவத் தாக்குதலின் மத்தியில் ஓர் அரச பயங்கரவாத அடக்குமுறைகளின் மத்தியில் முடிவுகளை எடுத்து எதிரியை மூச்சுத்திணற வைத்துக் கொண்டிருக்கின்றது தமிழரின் படை! வெளியில் வாழும் நாமோ விலாவரியாக விளக்கங் கேட்டுக்கொண்டு அலைகின்றோம். எந்த நேரம் எங்கு தாக்குதலைச் செய்கின்றோம் என்று கூட எமது விடுதலை வீரர்கள் எமக்கு விளக்கந் தரவேண்டுமென எதிர்பார்த்து நிற்கின்றோம். எமது சொத்துக்களைச் சிங்களவர்களிடமிருந்து காப்பாற்றும் காவற்காரர்களாக எமது வீரர்களை நடத்த நினைக்கின்றோம்.

வெளிநாடுகளில் பஞ்சணை மெத்தையில் இருந்துகொண்டு வரட்டு வேதாந்தங்களைப் பேசியும் ஏட்டுத்தீர்வுகளை அலசி ஆராய்ந்தும் வரும் நாம், முடிவுகளெடுத்துப் பார்சலில் அனுப்பும் முயற்சியிலும் ஈடுபடுகின்றோம். தற்போது ......... நம்மாற் செய்யக் கூடியது இரண்டில் ஒன்று தான்.

ஒன்று :- தலைமையை ஏற்று எமது பகைவனைத் துரத்தியடிப்பது.

மற்றது :- ஒத்துழைக்காவிட்டாலும் உதைக்காமலிருப்பது ; காட்டிக் கொடுக்காமலிருப்பது!. எமது இனம் இன்றாவது திருந்தமாட்டாதா என்று ஏங்குகின்றோம்.

**Sri Lankan & South Indian Food Products, Magazines, News Papers, Cine-Publications, Tamil Audio & Video Cassettes and C.D**

KUMARANS

**also**
**Fax Services to Sri Lanka & India**

**Fax: 081 521 9482**

உங்கள் அனைத்து உணவுபபொருட்களையும் ஒரே இடத்தில் தெரிவு செய்யுங்கள

* தமிழ், ஆங்கில மாதாந்த வாராந்த சஞ்சிகைகள், பத்திரிகைகள்,பஞ்சாங்கம
* தமிழ் ஓடியோ, வீடியோ, கொம்பகட் டிஸ்குகள
* இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நண்டு, சுறு, மீன், இறால், அரிசிமா, ஊறுகாய, நலலெணணெய, பழவகைகள், இடியப்பம், பல சரக்கு வகைகள், கறிவேப்பிலை, இன்னும பல பல....

ஒரு முறை விஜயம் செய்யுங்கள், உண்மை புரியும்!

# KUMARANS

**142, Hoe Street, Walthamstow, London E17 4QR**
**Tel: 081 521 4955 & 081 520 5960**
**Tube: Walthamstow Central**
**Open Seven Days a Week. (9a.m. - 10.p.m.)**
**Mail Order Service Available**

# குருதிப்பூக்கள்

எமது பாதை தூய்மையானது!
அதில் மேடும் பள்ளமும் இருக்கலாம்!
அதனைச் சகிக்கும் தாராள உள்ளம்
நம்மிடம் இருக்கின்றது!

ஏ தமிழா!
நான்.....நான் என்று கொக்கரித்தது நேற்றோடு போகட்டும்!
நாம்! நாம் ! என்று கர்ச்சனை செய்!
சுயநலத்தின் சுமைதாங்கியாக வாழ்ந்த வரலாறு
நேற்றோடு சாகட்டும்!
தேசியப் பலத்தைக்......... கட்டியெழுப்பும் .......
அடிக்கற்களுக்கு .....
ஒரு தனித்தமிழீழத்தின் அத்திவார்த்தைக் கட்டியெழுப்பப் புறப்படு!
ஒரு தலைமையின் கீழ் ....
அணி திரண்டு.....
விடுதலைப் பயணத்தில் சங்கமமாகு!

## அற்புதம் நிகழ்ந்திட வேண்டும்

புவியிலே தமிழனின் மீது.......
துரும்பொன்று பட்டாலும் போதும்!!!
புலிகளின் உறுமல்கள் கேட்கும்!
போர்க்கொடி வானத்தை...
முட்டிட ஆர்க்கும்.!...
அதிரடிப் படை வந்து சேரும்!
கரும்புலிக் கூட்டங்கள்
கணத்தினிற் கூடும்!

இப்படி ஒரு நிலை வரவே ....
ஓர்
அற்புதம் நிகழ்ந்திட வேண்டும்!
அற்புதம் வேறொன்றுமில்லை!
நாம்
ஆயுதப் போரிற்கு நிதி தரலொன்றே!

### ஒரு போராளியின் பொன்னுரை

உன்னை முதலில்
மனிதனாக்குகிறேன்!
பிறகு
போராளியாக்குகிறேன்!

நன்றி : விடுதலைப்புலிகள்

*ஆதிகால மனிதன்..... காட்டு மிருகங்களோடு ஆயுதத்துடன் போராடினான்!
இடைக்கால மனிதன் ... சனநாயகத்தைக் கண்டுபிடித்து அதற்கு மகுடஞ் சூட்டினான்! ஆனாற் சனநாயகமோ..... ஊழலுடன் நட்பு கொண்டு ...தற்கால மனிதனைக் ... காட்டுக்கு அனுப்பி ஆயுதமெடுக்க வைத்துள்ளது!
இதனாலேயே கொரில்லா யுத்தம் உருவானது!*

# குருதிப்பூக்கள்

## "தொடு.... கதைகள்" ஒன்று



இருள் கவ்விக்கொண்ட....... அந்தக் குழிக்குள் .............
மனித மூச்சுக்கள்....ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன!
யார்......யார்....... இருக்கிறார்கள் என்று கணக்கெடுக்க முடியாதபடி
ஒருவருக்குள் ஒருவர் முடங்கிக் கிடந்தார்கள்!
இரத்த வாடையும் .. வியர்வை வெடுக்கும்..
காற்றினை .. நஞ்சாக்கிக் கொண்டிருந்தன!
மூச்சுத்திணறிய குழந்தைகளின்.. முனகல்கள் அங்குமிங்கும்
எழுந்துகொண்டிருந்தன!
பரமுவின் உள்ளம் .......... குமுறிக் கொண்டிருந்தது!
அவனது தம்பியைப் பற்றி ......அவன் கேள்விப்பட்ட கதை ..
ஏனோ அவனுக்கு அந்த நிமிடத்திலும் ..... நெஞ்சிற் கொதிப்பேறியது!
தம்பியை .. அகதிப்பட்டியலிற் சேர்த்து...அனுப்பிவைக்கப் பரமு...
எத்தனை பேரின் காலில் விழுந்து கடன் கேட்டிருப்பான்!
மூன்றரை இலட்சத்தை ... விழுங்கிக் கொண்டு......
அவனது தம்பியின் விடுதலைப் பயணம் ஆரம்பமானது!
போன தம்பி போனவன் தான்!
பியர் கானும் சிகரெட்டுமாக ... வெளிநாட்டு வீதியை
வலம் வருகிறானாம் அவன்!
பதுங்கு குழிக்குள் அடைபட்டுக்கிடக்கும் பரமு ,
தனது வேதனைகளை ... வெளிக்குச் சொல்ல
வாய்ப்பின்றித் துடிக்கிறான்!
அவன் தம்பியோ! வாய்ப்பிருந்தும் ....
அதைப் பயன்படுத்தாமல் வெளியுலகின்
உல்லாசவாசியாகிவிட்டான்!.

## தொலைபேசி மாந்தர்கள்: "அலோ! அலோ!"



அண்ணை! அகதிகளுக்காக... நிதி..திரட்டுறம்!

சொறி தம்பி! நான் பிரிட்டிஷ் சிற்றிசன்!
சும்மா தொல்லை தராதையுங்கோ!



அந்தாள் நல்ல உத்தியோகமெண்டு தானே.... கதைச்சவை!

நான் அப்பிடி நினைக்கேல்லை!
அந்தாளிட்டை சீ றெஜ் கார்தானேயிருக்குது!



நாங்கள் வீடு மாற யோசிக்கிறம்!

ஏனடாப்பா!

பக்கத்திலை தமிழர்கள் வந்திருக்குதுகள்!
என்ரை மனுஷிக்கு ... இது துப்பரவுக்குப் பிடிக்கேல்லையாம்!



என்ர மகன் புரட்சி சொய்யோணும் என்டு நிக்கிறான்!

என்ன செய்யப் போறானாம்?

ஆபிரிக்காவிலை ... பொம்பிளை எடுக்கப் போறானாம்!

# குருதிப்பூக்கள்

## "தொடு.... கதைகள்" இரண்டு



கந்தையா மாஸ்டரின் ....... வயிற்றிலிருந்து .....
இரத்தம் கொப்பளித்துக் கொண்டிருந்தது!
ஹெலியிலிருந்து .... பொழிந்த குண்டுகளால்...
அந்தத் தெருவின் வீடுகளும் .. குடிசைகளும்....
பொடிப்பொடியாகின!
மரணஓலமே........ அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது!
பதுங்கு குழிகளுக்குட் பதுங்கிக் கொண்ட மக்கள் .....
பீதியின் பிடியில் .... அலறிக் கொண்டிருந்தார்கள்!

காயமடைந்தவர்களைக் காப்பாற்றும் துணிவு..
அந்த விடுதலை வீரர்களின இயல்பாகிவிட்டதால்...
அவர்கள் காயமுற்றவரகளை மீட்பதிலே.......
கண்ணுங் கருத்துமாயிருந்தனர்!
பத்திலிருந்து .. பதினாறு வயதுக்குட்பட்ட.....
இளைய வீரர்களும் ........வீராங்கனையரும்.......
வீடுவீடாகப் புகுந்து....மீட்பு வேலைகளில் ஈடுபட்டனர்!
கந்தையா மாஸ்டரின்...காயத்தை கைகளாற் பொத்திக்கொண்டான் அந்த இளைஞன்.
கந்தையா மாஸ்டர் வலி பொறுக்க முடியாது முனகிக் கொண்டிருந்தார்!
சேர் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ!
நாங்கள் காப்பாற்றுவோம்!
அந்த இளைஞன் ..... மாஸ்டரின் காதுகளுக்குள்
மெதுவாக முணுமுணுத்தான்.
கந்தையா மாஸ்டர்.... அந்த இளைஞனைப் பார்த்ததும்
அவனை இனங்கண்டு கொண்டார்!
யாரது ! சோமுவா! .......... டேய். !
உன்னை.......... நான்.........!!
தத்தளித்தது.... மாஸ்டரின் குரல்!
சோமுவின் கண்கள் பனித்தன!
ஆமாம்! சோமுவை.... ஒன்றுக்கும் உதவாதவன் என்று
விரட்டியடித்த மாஸ்டருக்கு உதவிக் கொண்டிருந்தான்
அந்தப் பதினாறு வயது இளைஞன்.

மனனஞ் செய்வதில் வல்லுனர்களான எத்தனையோ
மாணவர்களைத் தட்டிக்கொடுத்து ...... அவர்களை...
டாக்டர்களாகவும் எஞ்சினியர்களாகவும் பார்க்கத்துடித்த
கந்தையா மாஸ்டரின் கண்களுக்குச், சோமு ,
ஒன்றுக்கும் உதவாதவனாக அன்று தெரிந்தான்.!
இன்றோ நாட்டுக்காக உயிரையும் தரும் பணியில்
அவன் ஈடுபட்டிருப்பதைப் பார்த்ததும் ...
கந்தையா மாஸ்டரால் உணர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!.
டாக்டர்களும்....... எஞ்சினியர்களும்..... அன்னிய மண்களைத் தேடி ஓடி விட்ட பொழுது ...
நாட்டை அணைத்துக் கொள்ளும் சோமுக்களை ..
அவரது நெஞ்சம்...... பெருமையோடு பார்த்துக்கொண்டது!
நான் . சோமுவின் மாஸ்டர்!
கந்தையா மாஸ்டர் நிம்மதியாகக் கண்ணை மூடிக்கொண்டார்!

# குருதிப்பூக்கள்

தென்னை மரமே! தென்னை மரமே!
வெகு தூரம் போறேன்!
தேசத்திலே... நெஞ்சை விட்டு....
நான் தூரம் போறேன்!
கண்ணை நீ கசக்காதே!
என்னை நீ மறக்காதே!
தென்னை மரமே! தென்னை மரமே!
நான் தூரம் போறேன்!

வண்ண நிலா வெளிச்சத்திலே....
அம்மா அப்பாகை பிடிச்சுக்
கண்ணாமுச்சி விளையாடி.....
உன்னைச் சுற்றி ஓடி வந்தேன்!

சன்னங்களும் ........ குண்டுகளும்.......
எம்மைச் சுற்றி வீழ்ந்ததம்மா!
அண்ணன் தம்பி உயிர் கொடுத்தார்!
அகதிகளாய் வடிவெடுத்தோம்!

எத்தூரம் போனாலும்... நங்கூரம் நாட்டினிலே!
செத்த பிணமானாலும்.. பெருமை, வாழ்ந்த வீட்டினிலே!
அப்பு... ஆச்சி வாழ்ந்த மண்ணு!
அன்னியர்க்கா நாம் தருவோம்?
சொட்டு வயசெனக்கிருந்தால்....
துவக்கெடுத்துப் போயிருப்பேன்!

தென்னை மரமே! தென்னை மரமே!
நான் தூரம் போறேன்!



## தூரச் செல்லும் பாப்பா




*இந்த அநியாயப்பட்ட "பாஸ்" வந்து .......*
*என்ரை பொடி........*
*காட்டிகுடுக்கிற மிஷனிலை சேரமுடியாமல கிடக்கு.!*

# இரைதேடும் ....... இதயங்கள்......



கொதிக்கும் உணர்ச்சிகளைக் ...
கொப்பளிக்கும் வேதனைகளை
அந்த ஓடங்கள்
ஏற்றி வருகின்றன!
கடல் நீர்..... இவர்களின்
தாய் மண்ணிலிருந்து ....
இவர்களைப் பிரித்திடப் போகுமா?



கொடுத்துண்டு வாழ்ந்த இவர்கள்.......
உடுத்த உடையுடன்.....
பிறந்த கரை விட்டு......
அடுத்த கரை அடைந்து விட்டார்கள்!
அடுத்தவர் கரங்களில் ஆறுதல் கிடைக்குமா?
இரை தேடும் இந்த இதயங்களின்
இன்னல் இன்றோடு தீர்ந்துவிட முடியுமா?



உதயமாகப் போகும் எதிர்காலத்தின்
இளைய விடிவெள்ளிகள்...
எதற்காக இத்துயராற்றில் நீந்துகிறார்கள்?
எதற்காக துன்ப அலைகளில் .. அலைமோதுகிறார்கள்?
தாகமெடுத்துத் தலை சுற்ற...
எங்கள் தாய் தந்தையர்.
ஊர் விட்டு ......ஊர்......
நாடு விட்டு.. நாடு செல்லும் போது..
எந்த நம்பிக்கையை நெஞ்சிலேற்றிச் செல்கிறார்கள்?

எம் கண்கள் மூடி விட்டாலும்...
எமது நாளைய செல்வங்களுக்கு ....
ஒரு நாடிருக்கும் என்று
அவர்கள் எம்மிடம் கூறுகிறார்களா?



கையில் நூலேந்திப் பள்ளி நோக்கி..
நடைபோட வேண்டிய பாதங்கள்.
வெய்யில் பொசுக்க.
மரப்பாலத்தில் ஏன் நடை போடுகின்றன?
இப்பிஞ்சு நெஞ்சுகள் பாடும் அந்த ஜீவ கீதங்கள்........
நமக்கு எதைக் கூறுகின்றன?

அந்த நாட்டில் நடமாட நீங்கள் வருவீர்களா
என்று கேட்கிறார்களா?
பகிர்ந்துண்டு வாழ்ந்த பண்பாடெங்கே?
என்று

எம்மைப் பார்த்து ..........
இந்த இரை தேடும் இதயங்கள் கூறுகின்றனவா?

# போராளியின் பிரார்த்தனை!

தேவனே!
உலகின் துன்பங்களைப் போக்க......
நீ சிலுவை சுமந்தாய்!
முள் கிரீடத்தினை அணிந்தாய்!
அளப்பரும் இன்னல்களுக்கு ஆளாகி .... நடந்தாய்!

உன் தியாக ஒளியின் முன்னே.....
இதோ நாமும் நிற்கிறோம்!

அநீதியும்... அடக்குமுறையும் கண்டு...
நீ கொதித்தெழுந்தாய்!
அதிகாரத்தின் நாசக்கரங்களைப் பொசுக்கும்..
ஆதவனாக எழுந்தாய்!

தீய சக்திகளுக்குத் தீர்வு தரும்............
ஞான தீபமாக ஒளிர்ந்தாய்!
அதிகாரத்திற்கு .எதிராக......
ஆத்மீகச் சுடருடன்......... பவனி வந்தாய் !

இறைவா!
எமது விடிவுக்காக ...... எமது இல்லங்கள்.....
மெழுகுவர்த்திகளாக எரிகின்றன!
எமது மக்களின் தேகங்கள்....
உயிரோடு எரிக்கப்படுகின்றன!
நெஞ்சிற் துன்பத் தீயின் கொப்பளங்கள்....
அனலாய்த் தகிக்கின்றன!
அதிகாரம்.... அடங்கி விடவில்லை!
தீய சக்திகள் தீர்ந்து விடவில்லை!
ஆத்மீக உணர்வுகளை மதிக்காமல் ........
அட்டூழியங்களை கட்டவிழ்த்து விடும் ..........
ஒரு கொடிய அசுர ஆட்சியை நாம் எதிர் கொண்டு
நிற்கிறோம் !......

உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல்...
உரிமைகளை தெரிந்து கொள்ளாமல்....
எமது தேசத்தை தீக்கிரையாக்கும் பகைவனிடம்.....
பேச்சுவார்த்தைகள் தோற்றுப்போய்விட்டன !
எங்கள் தாயும்.... தாய் நிலமும்....தாய் மொழியும்
நலிவுற்றிருக்க..... இன்புற்றிருக்க முடியவில்லை!
எங்களால்
தெய்வீகத்தின் மறுபக்கத்தில்....
தேசியத்தினை நாம் ஏந்திக் கொண்டோம்!
இதய சுத்தியுடன் .. எமது விடிவு நோக்கி..
விடுதலைப் பயணத்தில்....
ஈடுபட்டுள்ளோம்!
எமக்குக் கட்டுப்பாடுகள் தான் வரை கோடுகள்!
உண்பதிலும்...... உறங்குவதிலும்.... உடுப்பதிலும்...
எமக்குவரை கோடுகளுண்டு!
துப்பாக்கி வழியே பறக்கும் சன்னங்களுக்கும் .....
நாம் கணக்குக் காட்டவே வேண்டும்!
எமது சுயநலத்தினை தேசியத்தீயிற் பொசுக்கி
விட்டோம்!

இரத்தத்தை நாமும் வெறுக்கிறோம்!
ஆயுதங்களை நாமும் தூக்கியெறியத் துடிக்
கிறோம்! நூல்நிலையங்களையும்...
பாடசாலைகளையும்.... நோக்கித்
தொழிலகங்களையும்.... நினைக்கிறோம்!
துள்ளியோட

ஆனால் எமது மக்கள் .......வடியும் இரத்தத்துடன்....
வாழ வழியின்றி அலையும் போது....
ஆயுதத்தைக் கைவிட மாட்டோம்!
எமது மக்கள்... சுயநிர்ணய உரிமையுடன்....
சுதந்திரப் பிரசைகளாக வாழும் வரை...
நாம் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்போம்!
அதிகாரத்தையும் ..... அழிவு வேட்கையையும்
எமது மக்கள் எதிர்ப்பதற்கு......
நாம் கருவிகளாயிருப்போம்!
எமது பாதையில் எறியப்படும் அழிவுச்
சாதனங்களால்.... ஆத்மீகத்திற்கு அழிவு தரமுடியாது!
எமது ........

தேவா!
போலிகளும் காட்டிக்கொடுப்பவர்களும்
உன்னோடு முடிந்தாரில்லை!
எம்மோடும்......... மலிந்து கிடக்கிறார்கள்!

எமது மக்கள் ... துன்பம் நீங்கி....
அகமும் .. முகமும்.... மலரும் நாள் வரை...
எமது பயணம் தொடரும்!
கர்த்தரே! புரிந்துகொண்டவர்களுக்காக...
எம்மைப் நாம் ஆறுதலடைகிறோம்!
புரியாதவர்களுக்காக... அனுதாபப்படுகிறோம்!

உலக சனநாயகம்.... உண்மைச் சனநாயகமாய் மாற..
நாமும் பிரார்த்திக்கிறோம்!

நத்தார் பண்டிகையின் போதும் .....
நாமும் நமது மக்களும்.......
விடிவு நோக்கிப் போராடிக்கொண்டே இருப்போம்!
நீ எம்மோடு இருப்பாய்......
என்ற நம்பிக்கை நமக்கு எப்போதும் உண்டு!


**NAMNAADU**

***Eluththani Publications***
***B. M. Box. 5973***
***London WC1 N3XX***

*'நம்நாடு' எழுத்தாணி வெளியீட்டாளினால்.....*
*த.பெ.எண் 5973 லண்டன் WC1 N3XX எனும் விலாசத்திலிருந்து...*
*வெளியிடப்படுகிறது!*



ஐரோப்பாவில் தரமான
செல்வும் அச்சகம்

அச்சுவேலைகளுக்கு
081 - 478 6766 (இலண்டன்)